APRIL/MAY 2024

23UTA21 — அற இலக்கியம்

Time : Three hours Maximum : 75 marks

SHANMUGA INDUSTRIES ARTS & SCIENCE COLLEGE LIBRARY

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுபவர் யாவர்?

2. யாக்கை நிலையாமை - விளக்கம் தருக.

3. 'பந்தம் இல்லாத மனையின் வனப்பு இன்னா' - விளக்குக.

4. முந்தையோர் கண்டமுறை என்று ஆசாரக்கோவை கூறுவது யாது?

5. திரிகடுகம் - பெயர்க்காரணம் கூறுக.

6. கண்ணுக்கு வனப்பாவது யாது?

7. 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்று ஔவையார் குறிப்பிடும் இருசாதியினர் யாவர்?

8. கல்விக்கு அழகாவது யாது?

9. குமரகுருபரர் இயற்றிய ஏதேனும் இரு நூல்களின் பெயர்களைக் கூறுக.

10. அறநெறிச்சாரம் நூல் குறிப்பு தருக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

11. (அ) மேல்நிலையடைய பழமொழி நானூறு கூறுகின்ற வழிமுறைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) சிறந்த பத்து வழியாக முதுமொழிக்காஞ்சி கூறும் அறங்களை விளக்குக.

12. (அ) "எருதுஇல் உழவர்க்குப் போகுஊரம் இன்னா" என்ற பாடலின் பொருளை விளக்குக.

(அல்லது)

(ஆ) கல்வியின் இன்றியமையாமை குறித்து இனியவை நாற்பது கூறுவது என்ன?

13. (அ) ஒத்த ஒழுக்கங்களாக சிறுபஞ்சமூலம் கூறுவனவற்றைச் சுருக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) "பல்லுயிர்க்கும் தாய் அன்னன் என்னத் தகும்" - விளக்கம் தருக.

14. (அ) நல்லவர்களின் சிறப்புகளாக மூதுரை கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) "இடும்பைக்கு இடும்மைப இயல்பு உடம்பு" என்ற நல்வழிப்பாடலின் கருத்தினை எடுத்துரைக்க.

15. (அ) ஓதாமல் எனத் தொடங்கும் உலகநீதிப் பாடல் கூறும் அறக்கருத்துக்களைச் சுருக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) அறவுரைக்கு இன்றியமையா நற்குணங்களைச் சுட்டியுரைக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க.

16. விருந்தோம்பல் குறித்து வள்ளுவர் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

17. சமுதாயத்திற்குத் தீங்கு பயப்பனவாக இன்னா நாற்பது கூறும் கருத்துக்களைப் பட்டியலிட்டு விளக்குக.

18. திரிகடுகம் உணர்த்தும் தனிமனித ஒழுக்கநெறிகளை ஆராய்ந்து உரைக்க.

19. ஔவையின் அறமுரைக்கும் திறத்தினை மூதுரை, நல்வழிப் பாடல்கள் வழி நிறுவுக.

20. கல்வி, செல்வம் ஆகியவற்றின் இன்றியமையாமை குறித்து நீதிநெறி விளக்கம் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

———————